# அர்த்தமுள்ள கற்றலுக்கான மூளைக்கு உகந்த வாய்ப்புகள்

# (Brain Love Opportunity)

ஒரு மனிதனுடைய வாழ்வின் முதல் 6 ஆண்டுகள், அவனுடைய மூளையின் பெரியளவிலான மற்றும் பிரமாண்ட வளர்ச்சிக்கான காலகட்டமாகும். இந்தப் பருவத்தில்தான், வாழ்நாள் முழுமையும் கற்றல் மற்றும் சாதனைகளுக்கான அடித்தளம் இடப்படுகிறது. நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் செறிவான கல்விச் சூழலை, 6 வயதிற்கு உட்பட்ட காலகட்டத்தில் பெறுகின்ற குழந்தைகள், தங்களுடைய உயர்கல்வியை வெற்றிகரமாக நிறைவுசெய்வதுடன், மகிழ்ச்சிகரமான திருமண வாழ்வும் கிடைக்கப்பெறுகிறார்கள்; அவர்கள் இத்தகைய சிறப்பான சூழல் கிடைக்கப்பெறாத தம்முடைய சக மாணாக்கர்களைக் காட்டிலும் வெற்றிகரமானவர்களாய் திகழ்கிறார்கள்.

பொதுவாக குழந்தைகள், இயற்கையாகவே கற்றல் மற்றும் தன்னம்பிக்கையுடன், பலவற்றில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளல் ஆகியப் பண்புகளுடனேயே பிறக்கிறார்கள். தம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் மற்றும் பொருட்களுடன் ஒரு பிணைப்பை உண்டாக்கிக் கொள்ளுதலும் இவற்றில் அடக்கம். இந்த நேர்மறை ஈடுபாடு மற்றும் பிணைப்புகளின் மூலமாக, தேவையான சமூக மற்றும் உணர்வுவயப்பட்ட திறன்கள் குழந்தைகளுள் உண்டாகின்றன. தம்மை கவனித்துக்கொள்ளும் பெரியவர்களுடன், தம் வாழ்நாளின் ஆரம்ப கட்டங்களில் ஏற்படும் பலவிதமான உரையாடல்கள், குழந்தைகளின் வாழ்வில், வெற்றிகரமான உறவுமுறையை கட்டமைப்பதற்கான ஒரு உணர்வுவயப்பட்ட மேம்பாட்டை உருவாக்குகின்றன.

மனித உறவுநிலைச் சூழல்களில், வேறுபட்ட சவால்களுடன் கூடிய மேற்கண்ட மாறுபட்ட அனுபவங்கள், ஒரு குழந்தையின் உளவியலில், ஆழமான அர்த்தத்தை உண்டாக்குகின்றன. இத்தகைய மாறுபட்ட மற்றும் சுவாரஸ்ய சம்பவங்கள், 2 வயது காலகட்டத்திலுள்ள குழந்தைகளிடத்தில் நிகழவில்லையெனில், அவர்கள், தங்களுடைய வாழ்க்கை மிகவும் சலிப்புடன் நகர்வதாக நமக்கு பலவித குறிப்புகளின் மூலம் உணர்த்துவார்கள்.

***சலிப்பு…சலிப்பு…சலிப்பு***

ஒரு சலிப்படைந்த குழந்தையானது, சவால் மிகுந்த மற்றும் அர்த்தமுள்ள அனுபவங்களுக்காக அழுகிறது. அந்த அனுபவங்களை டிவிடி (DVD), தொலைக்காட்சி மற்றும் கணிப்பொறி விளையாட்டு ஆகிய அம்சங்களின் மூலமாக வழங்கிட கட்டாயம் முடியாது. குழந்தைகளின் வாழ்வோடு இணைந்துள்ள பெரியவர்களே, தம்முடைய நேரடி உரையாடல்கள் மற்றும் இதர பங்களிப்புகளின் வாயிலாகவே அத்தகைய அனுபவங்களை வழங்க இயலும்.

மேற்கண்ட அனுபவங்களிலிருந்து, தன்னுடைய தொடக்க காலத்திலேயே குழந்தை அறிந்துகொள்கிறது மற்றும் அக்குழந்தையின் சூழலைச் சுற்றிய பெரியவர்களே, அத்தகைய அர்த்தமுள்ள அனுபவங்களை வரித்துக்கொடுக்கும் பங்களிப்பாளர்களாக இருக்கிறார்கள். புதிய அம்சங்களும், திருப்பங்களும் மற்றும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளும் இணைந்த சூழலை பெரியவர்கள் உருவாக்குவதன் மூலமே, குழந்தையின் ஆற்றல்வாய்ந்த மற்றும் அதிவேகமாக வளரும் மூளைக்கு உதவிட முடியும்.

**மேற்குறிப்பிட்ட வகையிலான மூளை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு உதவிடும் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு சாதனங்கள் எத்தகையவை:**

* குழந்தையின் படைப்பாக்கத் தன்மையுடன் கூடிய கையாளுகை. மாறாக, குழந்தை வெறுமனே செயலற்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொம்மையோ அல்லது இதர செயல்பாடோ அல்ல.

* வெறுமனே பதிவுசெய்யப்பட்ட ஒலிகளை கேட்பதற்கு பதிலாக, குழந்தை தன்னியல்பாக ஒலி எழுப்புதல்.

* உடையாத, அதேசமயம் எளிதில் சேர்த்தமைத்து, பின்னர் விரும்புகையில் பிரிக்கும் வகையிலான விளையாட்டுச் சாமான்கள்.

தவழ்ந்து செல்லும் நிலையிலிருந்து நன்றாக எழுந்து நடத்தல் என்ற நிலைக்குச் செல்லுகின்ற வரையான இடைபட்ட காலத்தில், குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையை மிகவும் விரும்புவார்கள். அது, குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட சிறுபாத்திரங்கள் மற்றும் அதற்கான மூடிகளை வைத்து விளையாடுவதே..! அனைத்துவித சிறுபாத்திரங்களையும் இழுத்துப்போட்டு, மூடிகளை தட்டி ஓசை எழுப்பி, வெவ்வேறான மூடிகளை வெவ்வேறு பாத்திரங்களுக்கு பொருத்திப் பார்ப்பது, மூடிகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் குவித்து வைப்பது உள்ளிட்ட பல்வேறான நடவடிக்கைகள் இதில் இடம்பெறும். நடக்கும் நிலையிலுள்ள குழந்தைகள், ஒவ்வொரு மூடியையும் ஒவ்வொரு இடத்திற்கு

எடுத்துச்சென்று வைப்பார்கள். இந்த சிறுபாத்திர விளையாட்டு, குழந்தையின் மூளை தூண்டல் நடவடிக்கைக்கான 3 அடிப்படைகளை (கட்டளை விதிகள்) நிறைவு செய்கிறது.

இதில் ஒரு சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், குழந்தையின் விளையாட்டில் பெரியவர்கள் யாரும் சென்று தலையிட்டு இடையூறு செய்யவில்லை எனில், விளையாட்டு முடிந்தவுடன், குழந்தையானது, அனைத்துப் பொருட்களையும் எடுத்த இடத்தில் தானே கொண்டுசென்று வைத்துவிடும். இதை நாமே நேரடியாக கவனித்துப் பார்த்தால், இக்கருத்து உண்மைதான் என்பதை உறுதிசெய்து கொள்ளலாம்.

நாம் அமைத்துக்கொண்ட பரபரப்பான வாழ்க்கையில், தன்னுடைய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக, குழந்தையின் மூளையானது, தனக்குத் தேவையான நடவடிக்கைகளை சிறப்பாக தகவமைத்துக் கொள்வதற்கான நேரத்தையும், வாய்ப்பையும் நம்மால் பலநேரங்களில் வழங்க முடிவதில்லை. தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களுடனான கலந்துரையாடல், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளுதல் மற்றும் பல்வேறான பொருட்களை உடல்ரீதியாக கையாளுதல் போன்ற அர்த்தமுள்ள நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை ஒரு இளம் குழந்தை கட்டாயம் எதிர்பார்க்கிறது.

எனவே, உங்களின் மதிப்புவாய்ந்த நேரத்தையும் செயல்பாட்டையும், குழந்தைக்காகவும் சற்று ஒதுக்குங்களேன். உங்கள் குழந்தை அதற்காக எவ்வளவு ஏங்குகிறது தெரியுமா..!

***************

மூல ஆங்கிலக் கட்டுரை: **Maren Schmidt (மாண்டிசோரி ஆய்வாளர்)**

தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)

மேலதிக விபரங்களுக்கு: www.relieffoundation.in